செய்தி வெளியீடு: 705 நாள் 28.12.2015

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க**
**மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட**
**சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில்**
**தொற்று நோய் பரவாமல் தடுக்க**
**மக்கள் நல்வாழ்வுத்துறை போர்க்கால நடவடிக்கை.**

-----

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், அண்மையில் பெய்த கனமழையை அடுத்து பல்வேறு பன்முக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ஆணையிட்டார்கள். இதனைத் தொடர்ந்து, எடுக்கப்பட்ட கீழ்காணும் பன்முக நடவடிக்கைகளின் (Multi Dimensional Activities) காரணமாக மழை வெள்ளத்தை அடுத்து பரவும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பெய்த வரலாறு காணாத மழையை தொடர்ந்து இதுவரை 73,457 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு இம்மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை 74,24,273 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவத்துறை மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் இதுவரை 85,27,000 நபர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

தண்ணீரால் பரவும் நோய்களை தடுக்கும் முகமாக, மக்கள் நல்வாழ்வுத் துறையால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சிறப்பு நிகழ்வாக, கூடுதலாக 2000 டன் பிளீச்சிங் பவுடர் தருவிக்கப்பட்டு வெள்ளம் பாதித்த பகுதிகளில் அரை கிலோ வீதம் வீடு வீடாக சென்று விநியோகம் செய்யப்பபட்டது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளில் உள்ள கிணறுகள் (Well) மற்றும் கீழ் நிலை தொட்டிகளில் (Sumps) கண்டறியப்பட்டு மாசடைந்த நீர் முலம் நோய் பரவாமல் தடுக்க குளோரின் திரவம், பிளீச்சிங் பவுடர் தெளிக்கும் பணிகளில் 115 சுகாதார குழுக்கள் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வீடுகளில் பிடித்து வைக்கப்பட்டுள்ள குடிநீரினை சுத்தம் செய்வதற்காக 1 கோடி குளோரின் மாத்திரைகள் வாங்கப்பட்டு சுகாதார குழுக்கள் மூலம் வீடுகளுக்கு நேரடியாக சென்று குடிநீரினை சுத்தம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் ஒரு அங்கமான உணவு பாதுகாப்புத் துறை மூலம் சென்னைக்கு குடிநீர் விநியோகம் செய்யும் லாரிகளை கண்காணித்து அதில் தேவைப்படும் அளவிற்கு குளோரின் சேர்க்கப்பட்டுள்ளதா என்று பரிசோதனை செய்யப்பட்டுகிறது. அறிவுறுத்தலை மீறி குளோரின் கலக்காத தண்ணீர் கொண்டு வரும் தனியார் லாரிகளுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகளினால் பாதுகாப்பான குடிநீர் பொது மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்து நோய் பரவாமல் தடுக்கப்படுகிறது.

கொசு மற்றும் ஈக்களால் ஏற்படும் நோய்களை தடுக்க கொசு மற்றும் ஈக்கள் உற்பத்தியாகும் இடங்கள் கண்டறியப்பட்டு அதை அழிக்கும் பணிகளும் (Source Reduction), மருந்து தெளிக்கும் பணிகளும் (Treatment) தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது. முதிர் கொசுக்களை ஒழிக்கும் நோக்கில் கூடுதலாக, வாகனங்களில் வைத்து புகை அடிக்கும் 5 பெரிய எந்திரங்களும் (Vehicle mounted fogging machines), கையில் எடுத்து செல்லும் 25 புகை அடிப்பான்களும் புதியதாக வாங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், மண்டலங்களிலிருந்தும் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்தும் பூச்சியியல் வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, 2 பூச்சியியல் வல்லுநர்கள் மற்றும் 3 களப்பணியாளர்களை கொண்ட 20 விரைவு கொசு ஒழிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு இக்குழுக்கள் மூலம் இப்பணிகள் சிறப்பாக தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு உதவிட வந்த துப்புரவு பணியாளர்களுக்கு நோய்கள் ஏற்படாமல் தடுக்கும் வண்ணம் 42,350 பணியாளர்களுக்கு தடுப்பூசி (T.T.) போடப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு கையுறையும் முக கவசமும் வழங்கப்பட்டுள்ளது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட 6,06,609 சிறார்களுக்கு தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இப்பணிகள் மூலம், தமிழ்நாட்டில் பெய்த வரலாறு காணாத கனமழையை தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை மிகச்சிறப்பாக கையாளப்பட்டு தொற்றுநோய் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பொதுமக்களிடையே நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இச்சிறப்பு பணிகள் தேவைப்படும் காலம் வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**